DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.114/2025**

Prosecution witness **PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஈஸ்வர் பாபுலானி | Caste | : | |
| Father Name | : | கோபிசந்த் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 40 |
| Time | : | | | | |

**(Accused present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **06.07.2026**

**06.07.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது அருவங்காடு பாய்ஸ் கம்பெனியில் குடியிருந்து பாய்ஸ் கம்பெனியில் ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். 24.04.2025 ம் தேதியில் நான் காலை 08.40 மணியளவில் எனது மகனை அருவங்காட்டிலுள்ள பள்ளியில் விட்டுவிட்டு பாய்ஸ் கம்பெனியிலுள்ள எனது கடைக்கு 08.50 மணிக்கு வந்து கடையை திறந்து பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்தேன். எனது கடையானது ஊட்டி – அருவங்காடு ரோட்டை பார்த்த மாதிரி இருக்கும்.

2. நான் எனது கடையில் பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டிருக்கும் போது உதகையிலிருந்து ஒரு பல்சர் இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் குன்னூர் நோக்கி வந்தார்கள். அந்த ரோடு வளைவானரோடு ஆகும். மேற்படி இருசக்கர வாகனம் வேகமாக வந்ததால் அதை ஓட்டி வந்தவருக்கு கட்டுப்பாடு இழந்தார். ஆஜர் எதிரி தான் அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார்.

3. வாகனத்தை ஓட்டி வந்தவர் அவரது கைகளில் பிரேக்கை பிடித்திருந்தார். அதனால் அவருக்கு கட்டுப்பாடு இருந்தது. ஆனால் பின்னால் அமர்ந்திருந்தவருக்கு பைக்கில் பிடிக்க எதுவும் இல்லை. ரோடு அந்த இடத்தில்

கீழே இறங்கி மேல் ஏறும் வகையில் வளைவாக இருந்தது. மேற்படி இருசக்கர வாகனம் கீழ் நோக்கி உள்ள ரோட்டில் இறங்கி மேலே ஏறும் போது இருசக்கர வாகனம் குதித்தது. அதில் பின்னால் உட்கார்ந்திருந்தவர் வாகனம் குதித்த வேகத்தில் அவரும் மேல் எழும்பி சென்று ரோட்டின் இடதுபுறத்தில் இருந்த மின்கம்பத்தில் அவரது தலை மோதப்பட்டது. அதில் பின்னால் அமர்ந்திருந்தவரின் தலை கிழிந்து நடு மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னால் அமர்ந்திருந்தவர் தலைக்கவசம் அணியவில்லை, வாகனத்தை ஓட்டியவர் மட்டும் தலைக்கவசம் அணிந்திருந்தார். வாகனத்திலிருந்து இருவருமே கீழே விழுந்தனர்.

4. நானும் அங்கு கூடியிருந்த மற்றவர்களும் ஆம்புலன்ஸ்ற்கு போன் செய்தோம். போலிசுக்கும் போன் செய்தோம். ஆம்புலன்ஸ்சும் போலிசும் அங்கு வந்தார்கள். கீழே விழுந்த இருவரையும் ஆம்புலன்ஸில் சிகிச்சைக்கு அழைத்து சென்றனர். எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபர் இறந்துவிட்டார் என நான் பின்னர் கேள்விப்பட்டேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.